**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.121/2021 |
| Prosecution Witness | : | அ.சா.1 |
| Name | : | பிரபாகரன் |
| Father's/Husband Name: | : | அசோகன் |
| Address : | : | 2/24 ஏ, கல்ஒட்டர் தெரு, மேலப்புலியூர், பெரம்பலூர் |
| Age | : | 33/2023 |

<u>தேதி: 01/11/2023</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது</u>( **1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**)

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெரம்பலூரில் பவித்திரன் இ-சேவை மையம் என்ற பெயரில் தொழில் நடத்தி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள உள்ள கையொப்பம் என்னுடையது தான். கடந்த 18/04/2021 அன்று காலை 8.00 மணியளவில் எனது சித்தப்பா ராதாகிருஷ்ணன் ஜேசிபி-யை கொண்டு வந்து வீடு கட்ட வேண்டும் என வேலையை ஆரம்பித்தார். ஏற்கனவே எங்களுக்குள் நிலத்தகராறு இருந்ததால் அதை சரி செய்து விட்டு வேலையை ஆரம்பிக்கும் படி நான் ஏற்கனவே கூறியிருந்தேதன். ஆனால் அதை

கேட்காமல் மீண்டும் வேலை செய்தார். அதனால் நான் தடுத்தேன். அதற்கு கத்தியை எடுத்து வந்து என்னை வெட்ட வந்தார். நான் நகர்ந்து கொண்டேன். அருகில் எனது அம்மா தனலட்சுமி நின்று கொண்டிருந்தார். எனது அம்மாவை தலையில் தாக்கி விட்டார். அவரது மகன் ராஜசேகர் உருட்டு கட்டையை எடுத்து வந்து தலையில் என்னை தாக்க வந்தார். அதை எனது அக்கா மேனகா தடுக்க வந்தார். அதனால் எனது அக்காவிற்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. மேலும், உருட்டு கட்டையால் என்னை தாக்கி விட்டனர். அதனால் எங்களுக்குள் ஒருவருக்கொருவர் தாக்கி கொண்டோம். 108 ஆம்புலன்ஸ் மூலமாக அங்குள்ளவர்கள் எங்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நான் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

JMP